### *Bye-pass road at Hosur*

*605 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal pending with the Government to form a bye-pass road at Hosur in Dharmapuri district; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (*a*) Yes.

(*b*) The formation of bye-pass at Hosur in Dharmapuri district is part of the scheme for improvements to National Highways 7, i.e. Mysore Border Krishnagiri-Salem section under 'International Development Association Programme'. The scheme is estimated to cost Rs. 64.96 lakhs. The estimate for the work has been sanctioned by the Government of India. The tender proposals are under the consideration of the Government.

THIRU B. VENKATASWAMY : From Madurai, Tiruchirappalli and Coimbatore if people want to go to Bangalore, they will have to pass through Hosur. The present road at Hosur is small. Will this Government press on the Centre to erect this road urgently including it in national highway?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The main question is about bye-pass road. I have said that Government has already approved a scheme of Rs. 64.96 lakhs of rupees. As soon as tenders are settled, the work will commence. All steps will be taken to expedite the work.

THIRU K. S. KOTHANDARAMIAH : The land required for the construction of this road was taken up nearly 10 years back. The road has not yet taken shape. May I know whether Government will reiterate that this work should be taken up early?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : As I have already stated, this forms part of the National Highways No. 7. The Government of India have given the necessary permission for bye-pass road and all steps are being taken to widen and improve the pathway and we are expecting certain orders from Government of India. As soon as the orders are received, the execution of work will take place.

*1973 ஏப்ரல் 2]*

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவரவர்களே, இந்த பை-பாஸ் பாதை அமைப்பதற்காக டெண்டர் கோரப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது எந்த ஆண்டில் முடிவு பெறும் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போல பை-பாஸ் பாதை சேலத்தில்கூடப் போடப்படுவதாக முன்பு டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டு, நிலம் ஆர்ஜிதமும் செய்யப் பட்டது. ஆனல் அந்தப் பாதை இன்னும் நிறைவு பெருமல் இருக் கிறது. இப்படிப்பட்ட திட்டங்களை உடனடியாகச் செய்து முடிப்பதற்கு அரசு ஒரு காலவரையறையை நிர்ணயம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தத் திட்டத் திற்கு 4.56 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த வேலை முடிந்துவிடும். இந்த நிலம் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டவுடன் ஏற்கெனவே கோரப்பட்ட டெண் டர்களை முடிவுசெய்து, உடனடியாக வேலை தொடங்கப்படும். வேலை தொடங்கி ஓராண்டு காலத்திற்குள் முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, அரசாங்கம் சென்னை மாநகரினுடைய போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து வருவதாக அமைச்சர வர்கள் சொன்னார்கள். அதேமாதிரி இந்த பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி இவைகளின் மூலமாகவும் போக்குவரத்து நெருக் கடியைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, காலப்போக்கில் கூவம் ஆற்றிலும், பக்கிங்காம் கால்வாயிலும் போக்குவரத்து வசதி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.